**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.3/2021**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முரளி | மதம் | : இந்து |
| த/பெ | : கிருஷ்ணா ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 37 | கிராமம் | : காசிநாகபுரம் |
| தொழில் | : -- | வட்டம் | : திருத்தணி |

**18.02.2025**

**பி.வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கின் வாதி எனது அண்ணன் என்றால் சரிதான். வழக்கில் 1ம் பிரதிவாதி எனது அப்பா என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்க தெரியும் என்றால் தெரியாது. என் அப்பா வழக்கு சொத்தை ஏழுமலைக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் இல்லை. வீட்டு மனை மட்டும் கேட்டதால் எழுதி கொடுத்தார்.

2. 21.10.2019ல் என் அப்பா ஏழுமலைக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் வீட்டு மனை மட்டும் கேட்டதால் எழுதி கொடுத்தார். மொத்தம் 5 இலக்க சொத்துக்களை செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1ல் 15ம் பக்கத்தில் உள்ள ஆதார் அட்டையில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். (**சாட்சி ஒப்புக்கொண்டதால் மேற்படி கையெழுத்து வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) என் அப்பா கையெழுத்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1ல் 1 முதல் அனைத்து பக்கங்களிலும் உள்ளது என் அப்பாவின் கையெழுத்து என்றால் ஆமாம்.

3. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1ல் 7ம் பக்கத்தில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். (**சாட்சி ஒப்புக்கொண்டதால் மேற்படி கையெழுத்து வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) வா.சா.ஆ 1 செட்டில்மெண்ட்

ஆவணத்தில் உள்ள சொத்து மூத்த மகன் என்ற பாசத்தில் என் அப்பா வாதிக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றாலும் நான் அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)